DINAMANI 28/2/18



# திட்டமிட்டுச் செயல்பட்டால் விவசாயத்தை லாபமாக நடத்த முடியும்

தாம்பரம், பிப். 27: திட்டமிட்டுச் செயல்படுவதன் மூலம் விவசாயத்தை லாபகரமான தொழிலாக நடத்த முடியும் என்று நல்ல கீரை கிராம மேம்பாட்டு அமைப்பின் தலைவர் ஜெகநாதன் தெரிவித்தார்.

சென்னை மேற்கு தாம்பரம் சாய்ராம் பொறியியல் கல்லூரி வணிக மேலாண் துறை சார்பில் அண்மையில் நடைபெற்ற எதிர்கால தலைமைச் செயல் அதிகாரம் குறித்த கருத்தரங்கில் அவர் மேலும் பேசியது: தங்கள் மாணவர்களை பெரும் நகர்ப்புறத் தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்புகளைப் பெறும் தகுதியுள்ள மனிதவளமாகத் தயார்படுத்தும் முயற்சியில் வணிகமேலாண் கல்வி நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன.

கிராமப்புறப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் விவசாயம் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டு விவசாயத்தை லாபகரமாக நடத்த முடியும். திட்டமிட்டு செயல்படுவதன் மூலம் விவசாயத்தை லாபகரமான தொழிலாக நடத்த முடியும்.



மாணவர்களுடன் கலந்துரையாடிய நல்ல கீரை நிறுவனத் தலைவர் ஜெகநாதன், சென்னை ஏற்றுமதி வணிக சங்கத் தலைவர் விஜயராஜ்.

ஆண்டு முழுவதும் விவசாயம் மேற்கொள்ள வசதியான தட்பவெப்ப சூழல் நிறைந்த விவசாய பின்புலக் கட்டமைப்புமிக்க இந்தியாவின் கிராமப்புற பொருளாதார வளர்ச்சியை பல கார்ப்பரேட் நிறுவனங்கள் திட்டமிட்டு தடுத்துவிட்டன. இதனால் உள்நாட்டில் உற்பத்தியை ஊக்குவிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் சமையல் எண்ணெய், பருப்பு வகைகளை ஆண்டுக்கு ரூ.20 லட்சம் கோடிக்கு இறக்குமதி செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

முதல்கட்டமாக வெள்ளை சர்க்கரைக்குப் பதிலாக உள்நாட்டில் கிராமங்களில் உற்பத்தியாகும் நாட்டுச் சர்க்கரை, மஞ்சள், சமையல் எண்ணெய், பருப்பு வகைகளைப் பயன்படுத்துவதன் மூலம் கிராமப்புறப் பொருளாதார வளர்ச்சிக்கு நம்மால் உதவ முடியும். வணிக மேலாண் கல்வி மாணவர்களுக்கு எங்களாலும் வழி காட்ட முடியும் என்றார் அவர்.

சென்னை ஏற்றுமதி வணிக சங்கத் தலைவர் விஜயராஜ், சாய்ராம் வணிக மேலாண் துறை இயக்குநர் கே.மாறன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.